[1994 ஏப்ரல் 20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு ஒரு கேள்வியைக் கொண்டுவந்து, அந்தப் பாதைகளை சரி செய்த உடனேயே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைத் தொடர்ந்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்பதை நான் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *308*, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் *309*, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309–

மதுராந்தகம் ஏரியை நவீனப்படுத்துதல்

***9282** திரு. பி. சொக்கலிங்கம்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோயில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இருப்பதால், அந்த ஏரியை நவீனப்படுத்த " குளம் அமைத்தல்" திட்டத்தின்கீழ் மதுராந்தகம் ஏரியை அரசு தேர்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோவில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரியினை நவீனப்படுத்திட பொதுப்பணித்துறை சிறுபாசனப் பிரிவில் திட்டம் ஏதும் இல்லை.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். மறைந்த பாரதப்

1994 ஏப்ரல் 20]

பிரதமர் 35 ஆண்டுகளுக்கு முன்னால் மதுராந்தகத்திற்கு வருகை புரிந்தபோது அந்த ஏரி தூர்வாரப்பட்டது. அதன் பிறகு கடந்த 35 ஆண்டுகளாக ஏரி தூர் வாரப்படாமல் சுமார் 14 அடி ஆழம் தூர் நிரம்பி உள்ளது. ஆனால், முப்போகம் பயிரான 10 ஆயிரம் ஏக்கர், இப்போது ஒரு போகம்தான் பயிராகின்றது. எனவே, தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதி ஆண்டிலேயாவது தூர் வார ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளை ஆழப்படுத்துகின்றபோது—மிகப் பெரிய ஏரிகளை, 250 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரை, ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் கீழே நாம் தூர் வாருகின்ற பணியை செய்கின்றோம். ஆனால், இந்த மதுராந்தகம் ஏரி 1137 ஏக்கர் இருப்பதால், இதை இந்தத் திட்டத்திலே எடுத்துச் செய்ய முடியாது. ஆனால், 99 லட்சம் செலவிலே ஏற்கனவே மதுராந்தகம் ஏரியினுடைய கலிங்குகளை எல்லாம் பராமரிப்பதற்கு பணிகள் நடைபெற்று முடிந்து இருக்கின்றன. ஆகவே, ஏரியை ஆழப்படுத்துவதற்குப் பெருவாரியான தொகையை அரசு செலவழிக்க வேண்டி இருக்கும். இது சம்பந்தமாக திட்டம் தற்போது அரசிடத்திலே இல்லை. இருந்தாலும், வேறு உலக வங்கியிலே, பல்வேறு நிலைகளிலே நான் ஏற்கனவே மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு திட்டங்களை மைய அரசுக்கு நாம் அனுப்பி இருக்கிறோம். அதன்மூலம் அந்தத் திட்டங்கள் ஏதாவது செயல்படுத்துவதற்கு வாய்ப்புகள் வருகிறபோது இதுபோன்ற பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 310, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை. திரு. தேனி பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.